786

பிஸ்மில்லா ஹிர்றஹிமா நிற்றஹீம்.

றசூல்சல்லல்லாகு அலைஹிவஸல்லம்

அவர்கள்மீது

---

பக்திரஸப்

# பதாநந்தகீர்த்தனை.

---

இஃது

திண்டுக்கல்தாலூகா வேல்வார்கோட்டை

ம. சே. பக்கீர் முஹம்மது லெப்பை சாஹிப்

அவர்களாலியற்றியதை

ஷை ஊரிலிருக்கும்

மகா-ள-ள-ஸ்ரீ ஷேகப்ப இராவுத்தரவர்கள் குமாரர்

ஜனுப் அப்துல்வஹாப் இராவுத்தரவர்கள்

பொருளுதவியால்

மலையாளம் புசுருக் அப்துல்காதர் கோயா

அவர்களாற் பிழையறப் பரிசோதித்து,

---

மதுரை, வடக்குமாசிவீதி,

...சந்திர விலாசம் பிரஸிற்

...ப்பிக்கப்பெற்றது.

1922. [விலை அணா 6

97:417
N22
128159

786

பிஸ்மில்லா ஹிர்றஹிமா நிர்றஹீம்.

றசூல்சல்லல்லாகு அலைஹிவஸல்லம்

அவர்கள்மீது

பக்திரஸப்

# பதாநந்தகீர்த்தனை.

இஃது

திண்டுக்கல்தாலூகா வேல்வார்கோட்டை

ம. சே. பக்கீர் முஹம்மது லெப்பை சாஹிப்

அவர்களாலியற்றியதை

ஷை ஊரிலிருக்கும்

மகா-ள-ள-ஸ்ரீ ஷேக்கப்ப இராவுத்தரவர்கள் குமாரர்

ஜனுப் அப்துல்வஹாப் இராவுத்தரவர்கள்

பொருளுதவியால்

மலையாளம் புசுருக் அப்துல்காதர் கோயா

அவர்களாற் பிழையறப் பரிசோதித்து,

மதுரை, வடக்குமாசிவீதி,

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1922. [விலை அணா 6

பிஸ்மில்லா.

## மலையாளம், புசுருக், அப்துல்காதர் கோயா அவர்கள் கொடுத்த சாற்றுக்கவி,

### விருத்தம்.

மறைநூல்கடந்து மிறையோனருசில் மகிழ்ந்துசென்ற
இறசூல்முஹம்மத் பாதாரவிந்த மெத்தினமும்
சிரமீதுகொண்டு பக்கீர்முகம்மது செப்புகவி
நிறைவூற நல்லோர் செவிக்கின்பம் நல்கும்நிச்சயமே.

---

## வேல்வார்கோட்டை, ம. ஷேக்அப்துல் காதர் லெப்பை சாயபு அவர்கள் கொடுத்த சாற்றுக்கவி.

### விருத்தம்.

சங்குமணிகதிர்பாய்ப் பத்தடாகத்தா மரைமலரத் தன்பணைசூழ்
பொங்குமலர்ச்சோலையுறப் புகவேல்வார்கோட்டையினிற் பொருந்துவாசன்
மங்களஞ்சே ராசகவிப் பக்கீர்முஹம்மதுசெய் மணிவாய்வந்த
சங்கீர்த்தனப்பதத் தைப்படிப்பவர்க்கே யருளிதமுந் தருவதாமே

---

## இது, பொருளுதவி செய்து அச்சியற்றினரைக்குறித்து இந்நூலாசிரியர் பாடிய புகழ் விருத்தம்,

தேமேவு மலர்ச்சோலை சூழுமதினநகர்ச்
    செய்யதஹ்ம்மூதுநபிமேற்
சிங்காரப் பக்திரஸக் கீர்த்தனையையுலகெலாஞ்
    செப்பிடப்புகழ்பரவவே
பாமேவுவேலுவார் கோட்டைநகர்வாழ்கின்ற
    பாக்கியமிகுயோக்யவானும்
பண்புமிகு ஷேக்கப்பராவுத்தர் தவமதிற்
    பாறுவென வந்தபுனிதன்
காமேவுமப்துல்வ ஹாப்பெனும்பெயர்பெற்ற
    கன்னுவதாரப்பிரபு
கருணையுட னச்சதி லியற்றிடப் பொருளுதவிக்
    காத்ததிரு வாளன்மகிழ
மாமேவுபுவிகடல் கெவிழுதற்பாதாளம்
    வகுத்தழிக்கின்ற கோவே
வல்லவா நின்கருணைமாறுமல் வைத்தருள்
    வாகிதுஜ ஜாதானபொருளே

1

பிஸ்மில்லா.

# பக்திரஸப் பதாநந்தக் கீர்த்தனை.

—(*)—

## காப்பு விருத்தம்.

அருசுகுருசுந்தரம் கலம்லவுகுகந்தரம்
அருணனுடுவானமதியும்
அருமையுறு சொர்க்கமுஞ் சிறுமைதருநாகமு
மவனிமேற்கெனிகள்மலையும்
பெருமையுறு கடல்திசைமனுமுதல் ஜின்கணம்
பெரிதரிது பெரிதரிதுகாம்
பேசுதற்குளமகிமை பல்லுயிர்கள் யாவையும்
பெட்புடனமைத்தபொருளே
திருமறையினுறைபுனிதன் மறுமையில் மன்றாடியுஞ்
செய்யதஹறம்மூதுகயியின்
செஞ்சரணபக்திரஸ சிங்காரக்கீர்த்தனம்
செப்பவேநிதிபெருகவே
வருணமார்ருபமில் லாத மெய்ப்பொருளான
வல்லவா நினதுகருணை
வருகவேகவிமதுரம் பெருகவேகாந்தருள்
வாகிதுஜஜ்ஜுதானபரமே.

---

அடுக்குமல்லிகை தொடுக்கும்மெத்தையிலே என்ற மெட்டு.

1 திருவாயெங்கு நிறைந்தவல்லவனே—கடல்மலைகள்
திசைகள்பாதாளமமைத்த நல்லவனே—நிதம்
சிறந்தஅருசுன் குருசஞ்கனம்
பொருந்துங்கதிரு மதியுமுடுவும்
திறமாய்ப்புவியைவகுத்த சிற்பரனே—என்நாளுமுந்தனைத்
தேடித்துதிப்பேன் தேவாதம்பரனே.

2 சிறந்தமெய்ப்பொரு ளாயுதிந்தவனே—ஏழையென்மீது
சிறக்குந்தாய்போ லுருக்கமுற்றவனே—உனைத்
தெரிந்துமுக்காலும் பெருந்தவஞ்செயும்
துறந்தபெரியோர் பொருந்துமனதிற்
சீராயிருந்தேயரசு செய்தவனே—பலவாய்நின்ற
ஜீவராசியிலே யுறைந்தவனே

3 பெருத்தஅண்டமதைக் காத்திற்றுங்கியே—கட்கனல்சிந்தப்
பேதையேனிடம் வாளையோங்கியே—வந்து
வருத்தலொருசொற் பொருத்துந்தேவரை
மறுத்துயான்பதி லுரைக்கவறியேன்
பீடுலாவுங்கருணையங்கடலே—உம்மையறியும்
பெருமைபெருக வுரிமைவந்திடலே

4 மனத்தின்வருத்த மகற்றும்வித்தகமே—நாயேனைக்காக்க
வறுமைநீக்குங் கருணைக்கற்பகமே—நல்
வரக்குமணமும் நோக்கமாகவே
யாக்கரீமென் றேர்க்கையாகவே
வரையும்பக்கீர் முஹம்மதுக்கருளே—யாரஹீமேகல்
வாஹிதுஜஉதான மெய்ப்பொருளே

விருத்தம்.

திருவுலவுநபியிறசூல் செம்பொற்பாதஞ்
ஜெகமெலாமரசு செய்த நபிகள்பாதம்
அருளுலவுநல்யார்க ளருமைப்பாதஞ்
அசைநசைகார் பத்துப்பே ரன்பின்பாதம்
திறளிலகுமசுகாபி மார்கள்பாதஞ்
செய்யதப்துல் காதிரெனச் சிறந்தோர்பாதம்
பொருளுலவுநாதாக்கள் பாதமெல்லாம்
போற்றிநவ சங்கீதம் புகலுவாமே.

நாலாவிதமேலோர்கவி என்ற மெட்டு.

### பல்லவி.

நாதாவேதா பாதமாமலர் நாசரீகரே—அநுதினம்
நாடினேன் நபியே (நா)

### அநுபல்லவி.

ஆதமுதலினுற்ற அண்ணலகம்மதுவே
நீதகல வேதமதைச் செப்பிவைத்தவா
பதமலர் நத்தவைத்தவா (நா)

### சரணம்.

தொல்லைதீருஞ் செல்லாவின்மறை வல்லவன்றாதா
அருள்புரி சல்லாப நபியே
கல்வின்மயில்ரூபமாய் நல்லஒளிவில்வந்த
காசீம் தாஹீம் யாசீமான காசிம்யாநபியே
கருணைசெய் வாசமுகமூதே (நா)

2 மந்தாரைமா சந்தானமகிழ் வாச்சிசண்பகம்
சூழ்ந்திடுங் காஷிமதினம்வாழ்
அந்தார்புகழுங்குண சுந்தரதயாபரரே
கந்தம்நறை காதங்கமழ் கமலத்தாளரே
கருணைசெய் ஹாமீம்யாநபியே (நா)

3 நஞ்சரவந் துஞ்சிடச்செய் வஞ்சிதனையைப்
பெண்ணுக்கும் ரஞ்சிதநாதா
பஞ்சயநபுஜங்கிலை பதுறதனில்மடித்த
மஞ்சிகுடை சூழும்நாதா வந்தருள்வீரே
இந்தவேளை கெஞ்சினேன்நேரே (நா)

4 தக்கோனருள் மிக்கபுகழ் தக்கும்நாதரே
அருள்புரி அக்கண்றாதரே
பக்கீர்முஹம்மதுதா ஸன்பகருமெய்ப்பொருட்கே

சித்தம்வையு மித்தருணம் மூத்திகாதரே
புகழ்மிகு சுத்தவேதரே (நா)

வெண்பா.

மாமணக்கும் பூஞ்சோலை மக்கநக ரின்பெருமை
யாமுரைக்க வேமிருந்த ராகமதாய்—நீமதித்தென்
வாக்கிலிருந் தேகிதமும் வாஹிதுஜூ தானவனே
காக்கவரு வாய்இறையே கா.

திருமாநகரமிதுதானே என்ற ஓரடிப்பதமெட்டு.

பல்லவி.

மக்காநகரினலங்காரம்—சகுபத்துல்லா
மகிமைவிளம்புவேன் சிங்காரம் (மக்)

அநுபல்லவி.

தக்கோன்மாகத்தின்வரை மிக்கசிகரந்தங்கும்
தனியோன்கிருபையாலே மணருயேழுந்துலங்கும்
பக்கம்ஹசுவரென்னும் கல்லின்துதியேபொங்கும்
பகரும்ஹாபுஜம்ஜமீன் கிணரேமிகவிலங்கும்
பகர்தற்சரிதிது சுகமுற்றிடுதலம்
நிகரற்றவனது பொருளுற்றிடுதிரு (மக்)

2 திக்கெங்கும்போற்றுதிருநகரம்—தினகரனும்
சொக்கியொதுங்குமதுபகரம்—ஆயிசாபீவி
குப்பாவுயர்ந்ததிருச்சிகரம்—நபியிறசூல்
பக்கல்வேதமிறங்குமகரம்—துதிபரவும்.
மிக்கவிண்ணவர்வந்து தக்குவாச்செய்யுந்தலம்
மேதினியோர்கள்கூடி ஹஜ்ஜுபுரியுந்தலம்
துக்கமகற்றுந்திரு நபிமார்புரந்ததலம்
துரைராஜர் அநுதினம் திரையேயளக்குந்தலம்
துதியேபரவுஞ் சுதைமாநகரே
மதியேயுரவே புரியுந்திருவே (மக்)

3 மிக்கவுலமாக்களின் கூட்டம்—ஹூவுலியாக்கள்
விளம்புஞ்சலபாத்துக்களூட்டம்—எந்நாளுமங்கு
சொர்க்கநகர்போலேகொண்டாட்டம்—மஹாயிகேன்கள்
வர்க்கங்கலிமாக்களின்சட்டம்—துயரகற்றும்
தக்கோனருசின்வரை தஸ்பியின்தொனிமுட்டும்
சையதஹமதவர்சலபாத்தின் குரலெட்டும்
மிக்ககலிமாத்தொனி யெட்டுதிசையுங்கிட்டும்
மேலார்தக்பீரின்தொனி புவியேழ்முழுதுஞ்சுற்றும்
மிகாநப்பதியிது நடுவுற்றிடுநகர்
துகளற்றிடுதுதி சகமுற்றிலும்புகழ் (மக்)

4 கொண்டல்வரையுபரும்மாடி—குயினுஞ்சோலே
சென்றேயுலாவிடுமேநாடி—பக்கமதினிற்
சென்டாக்கொடிகள்பலநீடி—சுற்றிலும்ஜாலர்
மண்டியடுக்கும்மெத்தைஜோடி—துலங்குமணி
பச்சைமரகதத்தாற்றூண்கள் வரிசைநாட்டி
பளிங்கிமகமேரென்றுஞ்சிலேயையிடையேகாட்டி
வச்சிரங்களிற்பல விட்டங்கள்மிகப்பூட்டி
மரகதமலேயைப்போல்'வளர்ந்திருக்குமேமாடி
வரிசைத்திறலாம் குரைசிக்குலமாம்
திறல்சேர்மகிமை குறையாநகரம் (மக்)

5 விகசிதமீனும்பஜார்வீதி—கடல்போற்சத்தம்
மேவப்பவளம்விற்பாரோதி—நிறைநிறையாய்
மகமல்ஜரிகைவிற்பார்ஜோதி—பச்சைப்பட்டுகள்
வயங்குந்தச்சுந்தீசுகள்க்யாதி—சங்கையாகிய
பொற்பூஷணதிகளும் புகழ்ந்துவிற்பார்கள்பாடி
புங்கமிகுந்தமுத்துச்சரங்கள் விற்பார்கள்நாடி
நற்பச்சைமரகதப்பளிங்கு குலோப்புசோடி
நாடுஞ்செம்புக்கரண்டி பதிவாப்அண்டாக்கள்கோடி
நண்ணத்தகுமிகு கிண்ணத்தொகுதியும்
வண்ணக்கடைகளுஞ் சொர்ணத்திருவுரு (மக்)

6 தக்கோன் ஹஜ்ஜுச்செய்வார்கள் கூடி—கருபத்துல்லா
தன்னைவலஞ்சுற்றுவார்நாடி—கஃபவாக்கல்லை
மிக்கமுத்தங்கொடுப்பார்தேடி—ஜம்ஜமீன் தண்ணீர்
பக்திகொண்டருந்துவார்சேடி—ஆபிசாபீவி

கத்துமடங்குந்தலம் சுற்றிப்பாத்திகாசெய்வார்
நண்ணிசபாமருவர் தன்னிலேயோடிச்செல்வார்
சுத்தமீனும்பஜாரில் கத்தன்குருபான்செய்வார்
துய்யோன்றனைநாடியே செய்யுஞ்சதக்காச்செய்வார்

ஆதியேரகுமான் பரமேயெனவே
இறசூல்நபியைப் புகழ்வார்தினமே (மக்)

7 அக்கன்றனைத்துதிப்பார்பெருக்கும்—அமரர்களும்
திக்கிர்தொனிகளவர்முறுக்கும்—சரிபுலாயல்
பக்கந்துந்திமிபம்பைச்செறுக்கும்—நபியிறசூல்
முக்கியசலபாத்துகள்சிறக்கும்—அருணிறைந்த

சொர்க்கநகரதுபோல் துலங்கும்மக்கநகரம்
சொல்லுதற்கரிதான பல்வளஞ்சூழ்நகரம்
பக்கீர்முஹம்மதுசொல் பகருந்திருநகரம்
படைத்தவனருணிதங்கிடைக்குமக்கநகரம்

பகர்தற்கரிதிது ஜெயசோபனமே
மிகநற்பதவி தருநன்னகரே (மக்)

ஐயா பழனிமலை வேலா என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 மங்காத தீபமணிச்சுடரே—எந்தன்
வாக்கில் வளருமுஹம்மதுவே
சிங்காரமான தயா நிதியே—நிதம்
தெரிசனந்தருவீர் ஹபீபே (மங்)

2 ஐந்தாறுகாரியமு மறியேன்—அதால்
ஆகிவளரும்பொருள் தெரியேன்
செந்தாமரைப் பதமேகெதியே—தேவர்
சிந்திக்கும் முஹம்மதெனுமணியே (மங்)

3 கங்குல்தனிலே மதியழைத்தாய்—தூய்ய
கலிமாப் பொருளெனவே யுதித்தாய்
சங்கையிறைபோ னருள் தரித்தாய்—உயர்
சமிகுல்முதுநபின பேரெடுத்தாய் (மங்)

4 தொல்லையெனும் பெரியவறுமை—என்னால்
சொல்லமுடியா தந்தக்கொடுமை
அல்லலகற்றுவ துன்கடமை—சரண்
அடைந்தோர்களுக்கிது நற்பெருமை (மங்)

5 மங்குல்குடையுடைய கோவே—கனி
வரையும் பக்கீர்முகம்மது ஃவ
சங்கையின்றிப் பணிந்தேன் ஹபீயே—திருத்
தாகமுஹம்மதே நீகாவே (மங்)

பட்டாபிஷேகம் படைத்திந்த என்ற மெட்டு.

1 ஒருபொருளாகிய திருஇறைதூதேயுன்
மருமலர்ப்பாதமது பெறநாடினேன்
கருணைசெய் யாரசூலே—திருவருள்
புரிகுவீ ரேயக்கரனே—என்மேல்
மர்மமேனோ தர்மமீதோ கர்மமதுநீக்கும்
சையதஹம்மதுவே.

2 மங்குல்குடைசூழும் அங்கங்கமழ்திரு
பொங்குமறைநாதா துங்கவசீகரா
திங்களழைத்த நாதா—அருள்தரும்
சங்கைவிளக்கு மோதா—உன்
மலரடியே சரணமெனப் பணிந்தேனெனக்கருள்
வள்ளல் முஹம்மதுவே

3 நாதாஉமையல் லால்வேறு கெதியில்லை
ஆதாரஞ்செய்தருள் வேதவிளக்கான
சோதிக்குணநிதியே—உடையவன்
தூதாகவமணியே—கெட்ட

வஞ்சர்கள் துஞ்சிடவே மிஞ்சிவெற்றிபெற்ற
மன்னுமுஹம்மதுவே

4 கூடும்படை தனிற் சாடுவுக்காசுக்கு
நீடும்வாளில்லாதால் தேடுமீத்தமட்டை
நாடும்வாளாச் செய்தவா—அநுதினம்
பாடுஞ்சக்திதரவா—
பாடிப்புகழும் கடிகமழும் அடியதனைப்
பாடினேன்யா நபியே

5 சந்ததமும்புகழ் சந்தக்கவிபாடும்
மைந்தனுக்கேயருள் தந்திடவாரும்
செந்தா மரைப்பாதா—துதிமிகு
சுந்தரமானசீதா—தினம்
அந்தாரும் சிந்தனைசெய் கந்தமலர்பதத்
தாரணநாயகமே

6 மிக்ககலைவளர் சொர்க்கநகர்க்கா
சக்கனருள் தூதா பக்கீர்முஹம்மது
பக்கம்வருங்கனியே—மெய்ஞ்ஞான
மக்கம்வளர் தனியே—எனைப்
பாதுகாரும் வேளையிது வேசமயம்
பண்பாரும் யாநபியே

சோமசேகரனருளும் பாலாவேலா என்ற மெட்டு:

பல்லவி

அங்கமெலாம்பொங்கும் நறைவாசரடி—எங்கள்
ஆமீனரீன் றயுவ ராஜரடி (அ)

அநுபல்லவி.

மங்குல்குடை சூழும்நபிநாதரடி—உயர்
மறைபுகழ்திரு நபியெனவரும்
பெருமைமதினை துறையெனவுறு

மாசில்லா நாயக ராகியகாரணர்
ஆசின்குலக்கொழுந் தாகியபூரணர் (அ)

சரணம்.

தங்கமானபங்கமிலா நாதரடி—உயர்
சபிகுல்முதுநபி னெனுஞ்சொல் வேதரடி—
திங்கள்தனையே யழைத்ததுங்கரடி—முஹம்மது
திருவிறையருசதனிலேறிய
ரகசியமதாய்த்—தெரிசனமபெற்றோர்
தினகரனுடன்—உரைபகர்ந்தவர்
குணவசிகர—ரெனவிளங்கிய (அ)

2 சங்கமுலவும்பதாரதனிற் சென்றோரடி—கெட்ட
சண்டாளருயிரை மண்ணிற்கொய்தோரடி
வங்கமெனவேயுலகில் வந்தோரடி
மன்றுடியும்மத்தை—சென்றேகரைசேர்க்கும்
திண்டோளராகிய—குன்றுநவமணி
வரிசைமிகவே—குறையாமசமணி
அரசர்க்கரச—ரெனுஞ்செழுமணி (அ)

3 புங்கமிகத்தங்குமருள் நாதரடி—இந்தப்
பூதலத்தில்தீன்பயிர் விளைத்தோரடி
எங்கும்புகழ்வேத ரெனுமேந்தலடி
இசைக்கும்பக்கிரு முஹம்மதுக்கருள்
ருசிக்கும்படிக்கே கொடுக்குங்கற்பகம்
இருபதியினும் அருள்புரிகுவார்
குருமுகமதாய் வருவாரிறசூல் (அ)

வெண்பா.

ஆதிமறை வேத மடங்காப் புகழ்மிகுக்க
சீதமதி னப்பெருமை செப்பவே—நீதியுடன்
எங்கும் நிறைந்தோனே ஏகப்பெருவொளியே
துங்கற்கு மானே துணை.

மாதலைநம்பலாகாது என்ற மெட்டு.

பல்லவி.

மதினநகரின லங்காரம் அதின்
மகிமைமிகுந்த சிங்காரம் (மதி)

அநுபல்லவி.

துதிபாவிடவீ ரேழுலகம்புகழ்
துய்யமுஹம்மதிர சூல்முஸ்தபாபவளர்
றவுலாவுடையதிருக் காஷிகள்சொல்லரிது
நயனத்திநெளிபோற் றேணுதுமனராக்கள்
நத்திப்புயல்வரைப் பற்றிச்சிகாமும்
ரத்தினகசிதம் தொத்துத்தெரிகுது (மதி)

சரணம்.

மதில்களுயர்ந்த சிங்காரக்கோட்டை மாகமளாவுமலங்காரம்
கதிரவனிடறிடும் புரிசையின்வாயல்
ககனமளாவிடும் மாடியினீடல்
துயரறமகரநற் றோரணமாடல்
துந்துபிபேரிம்பை தொனித்திடும்பாடல்
துரகதமுந்திடு ரதகஜமும்நிறை
வரிசைசெய்படைகளும் குறைவிலாமகிமையின் (மதி)

சுதைமதில்கூடியமாடி அண்டத்துயர்ந்திருக்குதேசோடி
மதிவந்துறவேநாடி புரியுஞ்சிங்காரமும்
மாடியில்ஜாலர்நிலை வைத்தசிங்காரமும்
அதிவிதஜன்னலில்கிந்தீனலலங்காரமும்
அடுக்கடுக்காய்நல படுக்கைச்சிங்காரமும்
அந்தநிறைந்துள பந்தியதாகிய
சுந்தரமுந்திரு வந்துவுலாவிய (மதி)

விதவிதமானவார்ப்பு மேன்மாடியில்தொங்குங்குலோப்பு
ககதகவெனவொளி தாக்கும்விளக்குகளும்

தபனன்போலேயொளிர் காசிலேட்டுகளும்
குபுகுபுவென்றெறியும் குத்துவிளக்குகளும்
குறையாசேட்டுஎலக்டிரிச் குடவிளக்குகளும்
கூடித்திருவுற நாடித்திறளதாய்
மாடித்தொகுதிகள் சோடித்தொணிவுள் (மதி)

நிதியதுவோங்கியமாடி பந்தல்நித்திலமொத்திடுஞ்ஜோதி
கதிதருங்கன்னல்செந்நெல் கடையும்பழக்கடையும்
கமகமெனமணக்கும் அத்தர்பன்னீர்க்கடையும்
விதவிதமாகியநல் மிட்டாயல்வாக்கடையும்
மேலாகஜவுளிதங்கம் விற்கும்மணிக்கடையும்
விந்தைநிறைந்துள பந்தியுறுங்கடை
அந்தரர்வந்துதினந் துதிசெய்திடும் (மதி)

கதைஅயில்குந்தம் அம்பீட்டிபலகருவிகள் விற்கிறார்நாட்டி
அதிவிததோட்டாபிஸ்தோல் விற்குங்கடைத்தெருவும்
சதிராய்சொட்டபட்டயஞ் சவளந்தோமரங்களும்
சாகரஞ் சூழ்புவியோர் தங்குமண்டபங்களும்
தனியவன்றனை நிதமினிதுபரவுவர்
தபசியர் பெருகிய அருள்வளமிகவுள (மதி)

புதியவனருளிய வேதமெங்கும் பொங்குதுதிக்கீரின்கீதம்
பதினுலகமும் படைக்குமுன் ஒளிவானோர்
பயகாம்பர்களுக்கெல்லாம் மணிமகுடமாய்வந்தோர்
துணியாவதனில்தீனோர் செய்பவந்தன்னைத்தீர்ப்போர்
துய்யமுஹம்மதெனுஞ் செய்யதஹம்மதானோர்
துகளிலாம்திமிகு சுகிர்தபதங்களே
சொல்லுஞ்சலாபத்துகள் அல்லும்பகலுமுத்து (மதி)

மதியையழைத்தநவ நீதர்மீதில்வரைகிறார் சலபாத்துஒதை
கதியருளியதிக்கீர் கழறுவோராதையும்
கலிமாமிகமுழங்கும் தஸ்பீகினோதையும்
ஒலிமாருலமாக்கள் தக்கிபீரோதையும்
உயருங்கவிவாணர் சங்கீதஒதையும்

உடையோனருளால் கவியேபகரும்
அடியேன்பக்கிர் முஹம்மதுபுகழும் (மதி)

தாதாபாய் என்ற மெட்டு.

பல்லவி.

தாஸீமாய் நவநீத (தா)

அநுபல்லவி.

தந்தான்சுந்தரக் கொந்தளமாகிய
முந்தலுளிவினில் வந்தேயுதித்திடும் (தா)

சரணம்,

ஆஸீங்குலக்கொழுந்தாய்—மாசில்லாநாயகமாய்
அருமறைமுடி தனிலுதித்தவா
திருநபியென வருகுங்கற்பக (தா)

தொகையறு.

தேசாதிதேசங்கள் தீன்கொடிநாட்டிய தேசிகராகியதிருநபியே
காஜாமுஹம்மதெனு மொளிவான காரணராகிய கற்பகமே

பாட்டு.

சித்தர் துதிக்குஞ்சிங்கம்—மெத்தர்தமக்குத்தங்கம்
சீதநற்குடை வேதர்சற்குரு
மாதவத்துறு நாதரற்புத (தா)

தொகையறு.

மாசிலாச்சோலைமாவளஞ்சூழ் மதினமாநகர்க்கரசான மாணிக்கமே
வீசும்பரிமள தேகவசிகரராகிய வேதாந்தமுச்சுடர்ரக்ஷகரே

பாட்டு

தோசமகற்றுந்திரு—காசிம்முஹம்மதுவே
துலங்கும்சொர்க்கமா நகர்க்கரசென
விளங்குமக்கமா நகர்முகம்மதே (தா)

தொகைரு

வரதசந்த்ரோதயா அதிவிதாணகுண மாகூிமைமேவிடும் நல்மணியே
அாதனகிகர்த்திடும் பதமதுதந்திட அருண்மழைபோல்
வருமற்புதமே

பாட்டு.

மேலாகவேவிதமும்—நாலாவிதத்துடன்துதி
விளம்பும் பக்கிருமுஹம்மதுக்கருள்
நலம்பெறவரம்புரியுஞ் சற்குண (தா)

மக்கம்பிறந்தாரே என்ற மெட்டு.

கண்ணிகள்,

1 ஆதிஒளிவிற்பிரிந்தநாதரே—எந்தனுக்குநல்
அருளே புரிவீர் நீதரே—திரு
அமாாறுதினமடிகள்பரவிய அஹம்மதேயுங்களின்
அடிமைதனைநிதமாள வொண்ணுதாநாதரே—மிகு
அதிவிதசுகுண அாசர்தொழும்பத அதிபரௌனமரும்
அனந்தவுயிர்கள்புகழ் ஆமீனரின்றபாலரே

மாதவம்புரியும்மாநிலந்தனிலே—மாதர்மோகவலை
மாய்கையாலெனதுள்ளம் மயங்காமலென்னைக்காருமே--உயர்
மாமதினநகர்மாஅரசுபுரி மாசிலாதமணி,
மாமுஹம்மதெனும் வரசுந்தாத்தங்கமே

3 காசினிதனிலே காசிமெனவரும் காமீமேவுங்களைக்
காவலென்றுநிதங்கருத்தி லறிந்தேன்நாதரே—உயர்
கந்தமேகமுஞ்சுந்தாத்திருவே சஞ்சமலர்ப்பதம்
கஞ்சனத்துருவாய் கபீயாய்விளங்குஞ்சீமானே

4 மாசிலாமணியே மாமறைப்பொருளே மாமதியழைத்த
மாதவத்அருதே மைந்தன்பக்கிர் முஹம்மூதே—கொண்ட
மனதிலநுதினம் மதுரமிகுகவி மொழிவதனையினி
மறவேனுனதடி மாகூிமைதங்கும் வேதரே

பகாரியாலா என்ற மெட்டு.

பல்லவி.

பரமன்றாதா பதம் தாரும் வேதா

அநுபல்லவி.

1 திருவானந்தமறை புருக்கானுகிய வேதா
கருமாமுகிற்குடைசூழ்நிலன் கரசிம்நாதா கமழ் முகம்மூதா

2 அருசேறிவந்தாய் ஆலந்தன்னையேயுண்டாய்
தர்ஜாபிகவழங்குந்திவ்ய தாவீமாய்நின்றாய்
அரசேயென்றுயர்தன்னை நீக்கும் அஹம்மதாய்நின்றாய்—
அருள் ஆனந்தங்கண்டாய் (பர)

3 மருமாமலர்சூழ் மக்கமாநகரில்
வரமாகியஜெம்ரத்து ஹஸ்தாவான தலத்தில்
திருவாகிய ஆமீனரம்மாள் செய்தவத்தில் பிறந்தீர்—எய்தீர்
நலத்தில் (பர)

4 விரிகடல்கள் சூழுமிந்தப்புவி மீதேகவி
விளம்பும்பக்கீர் முஹம்மதுபணிந்தேனே
குருவாகியமுஹம்மதெனும்மேரே எந்தன் துயர் தீரே (பர)

வந்தவேளையிது நல்லவேளை என்ற வர்ணமெட்டு,

இராகம்—பியாகு] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

முத்தாயிருந்தநல் வித்தேயருமறை
முச்சுடரேபுவி ரக்ஷகரே
சித்தானசெல்வந் திகழ்குருவேலாருஞ்
செந்தாமரைப்பதந் தந்திடவே (மு)

மோனப்ரகாச ஞானமணிபுகழ்
முன்னோன்றிருத்தூதா அண்ணலரே
தேனின்மணியே திருக்கனியேயுமைத்
தேடுந்தொண்டர்க்கருள் நாயகமே (மு)

செந்தாதுமேவிய சுந்தரரேயெந்தன்
சிந்தைதக்கவலை யகற்றிடுவீர்
சிந்தாமணியாய் விளங்கிடும்நாதாவே
வந்திடுவீர் பதந் தந்திடவே (மு)

கானகத்திற்பிணையாய் மானைவிடச்செய்த
கண்மணியேதிரு நன்னபியே
வானகத்திலருள் சேருந்திருப்பாதா
வந்திடுவீர் பதந் தந்திடவே (மு)

பொல்லாயிபுலீசை நீக்கிடுவீரென
துள்ளத்தரும்பொரு ளானவரே
வல்லோன்கலிமாக் குடையவரேநிதம்
வந்திடுவீ ராட் கொண்டருள்வீர் (மு)

ஆலம்புகழும் அகம்மதுவேதிரு
மேலோன்றிருத்தூத ரானவரே
பாலன்பக்கீர்முக மூதுகவியைக்கண்
பாருமையாயெனைக் காருமையா (மு)

புள்ளிக்கலாபமயிற்பாகன் என்ற வர்ணமெட்டு.

இராகம்—தேசிகம்.) (தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

மாதல மெலாம் புகழும் நபியே தினம்
வந்தருளைத் தந்திடுவீர் துரையே உயர்
மாகமேய ளாவ்மக்க யோகநக ரைப்புரந்த
மதியே நவ நிதியே (மா)

சீதளமுகிற் குடையே பிடிக்குஞ் செழுந்
திங்கள்வந்திறைஞ்சிப்புகழ் படிக்கும் வழுச்
சிந்தூரம் வயமாவல்ல புந்தியின் மகிழ்வாய்வந்து
சேரும் புகழ் கூறும் (மா)

கர்தம்நறை விசும்நவ நீதர் உயர்
காரணம தானபிர போதர் திருக்
கஞ்சமலர்ச் செஞ்சரணந் தஞ்சமெனவேபணிந்தேன்
யானே தினந் தானே (மா)

சோதிமயில் ரூபமான வானோர் உயர்
துய்யசிந்தி லாஅருசி லானோர் துதி
சொல்லும்ஜப ரூத்திலன்னம் நல்லவொளிவாகவந்த
வேதர் மகு மூதர் (மா)

மாதின்தசைக் கட்டிதனைப் பெண்ணு யிந்த
மாநிலத்தி லேயழைத்தீ ரன்னுள் மிகு
மங்கலந்துலங்குமக்க மாநகர்தன்னிற்பிறந்த
வாசர் குண நேசர் (மா)

சந்ததமு மூங்கள் பாதங் கதியே என்று
சாற்றினேனே செந்தமிழை நிதியே உயர்
சற்குருகற்கற்பகசெம் பொற்பதமேதந்தருளும்
தாகா அருள் விவேகா (மா)

பூதலத்தி லேமதியை யழைத்தீர் உமைப்
போற்றும்பக்கீர் முகம்மதி னகத்தில் தினம்
மொழியுங்கவிக்கிரங்கியருள் ஈகிமைகுறையாதுநலந்
தாரும் துயர் தீரும் (மா)

வெண்பா.

முச்சுடரொன் ருய்நிறைந்த முன்னோன் திருஒளியின்
ரச்சகராய் வந்தநபி நாயகமே—பச்சமருள்
முச்சகமும் போற்றிவரு மோனமணி யாயிருந்த
தச்சகரே வந்தருளோத்தா.

பொன்னுலகு சென்னிருள என்ற வர்ணமெட்டு.

இராகம்—காபி) (தாளம்—ஆதி.

கண்ணிகள்.

கன்னலங்கழனிசூழும் நன்னகர்மதினுதன்னிற்
காரணப்பொருளாய்வந்து கண்டவர்முன்னம்
பூரணமதியழைத்து விண்டவர்பெருங்
கங்குமூலவிய செம்பதூரினிற்
செங்கரமதனுல் மண்ணையெய்துமே
கரபர்களையேமடியச் செய்தவர் கானில்
தோயமதனையழைத்த மாதவர் (க)

செந்நெல்விளைந்தோங்கிவளர் புண்ணியமக்கநகரின்
சேவகரப்துல்லாதவப் பாலராய்மாந்தர்
பாவமகற்றிடவந்த சீலராய்தினந்
தேவருந்துதி காவலர்களும்
பாவலர்களுஞ் சேவைசெய்திடத்
தேடிடுமலர்ப்பதத்தை நாடினேன் தூய
ரோடிடவிச்சிந்துதனைப் பாடினேன் (க)

வாசம்வீசுங்காசிமாகி காசினியில்ராசராகி
வானவருலகினுக்குச் சென்றவர் இறை
யோனிடத்திலேமொழி நவின்றவர் திரு
வாசகக்கலி மாவிரைத்துமே
மானிடப்பயி ரேதழைத்திட
மானிலத்தில் வந்துதித்த புண்ணியர் அடச்
காஜகத்தின்மான்பினையாங் கண்ணியர் (க)

தேசம் யாவையும் நொடிக்குள் வாதில்சுருாவிற்சென்று
தேனையையறுத்தறுத்து வென்றவர் அந்தத்
திரன்மன்சிரஞ்சிதைத்து வின்றவர் கொடிய
தீயபாதக ஞய்விளங்கிய
மாயவஞ்சக னுத்துபாதனின்

[stamp]

சென்னியையத் தரையில் வீழச் செய்தவர் பூவில்
நன்னபமுகம்மதாய்வந் துய்தவர் (க)

காசினியிலன்னவரை நேசமதாய்நம்பினோர்கள்
கர்மவினைகளகன்று போகுமே அந்த
மர்மையின்பதியில்முத்தி யாகுமே எங்கள்
காசிமேதிரு யாசீம்மஎன
நேசமாய்விசு வாசமாய்மனக்
கண்களால் தரிசனைசெய் வீர்களே நாளுங்
கல்புநாவால்துதிபாடு வீர்களே (க)

எண்ணியெண்ணியேநிதமும் நன்னயமலர்ப்பதத்தை
என்னிருகண் நாடியெங்குந் தேடுதே நாவும்
நன்னபிவாரார்களென்று பாடுதே இசை
இன்சொலின்கவி தன்சியல்லால்
என்செயலினு லஞ்சலிசெய்
ஏற்கவேபக்கீர்முகம்மத் பாடினேன் துயர்
நீக்கிடுவீர்யாஹபீபென் ருடினேன் (க)

கலித்துறை.

மேனாளை செய்த வலுவினை போக விரும்பிநித்தம்
வானேறும் வள்ளல் மகுமூதர் பாதங் வழுத்துவோர்க்குத்
தேனூறு மின்பமே சித்திக்கும் பொல்லாச் செயலகற்றுஞ்
சேனோ ராகிவரும் நற்குருவே திருவி றசூல்நபியே.

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி) (தாளம்—ஆதி.

கண்ணிகள்.

ஆதிமறை வேதநாதரே அனுதினமுங் கருணைசெய்வீர்
ஆமீனாரீன்றமேதோர் போதரே தினங்
காதமேநறை வீசும்வாசமே
நேசமாய்ப்பத மாசைகொண்டனன்

கங்குலில்மதியழைத் தோரே கதிதருவி ரிதசமயம்
காத்திமுலன்பியா வானோரே (ஆ)

பூதலத்தோர் செய்யும்பாவமே போக்கியேநிதந் தாக்கியேயருள்
பொன்னடி தருகலாருமே மகா
போத முற்றிடு நீதமுத்தவ
வேத முற்றவ நாதவுத்தம
புண்யகுருவாம்ப்ராக்யாதரே புகழ்மிகுந்த மகிழ்வுவந்து
பூவடிதந்தாளும் நாதரே (ஆ)

மஞ்சுகுடை சூழும்நாதரே மகமூதரே குருநீதரே
வானவர் பணியும் போதரே உங்கள்
கஞ்சமாமலர் பாதமேகெதி
அஞ்சலென்றருள் தந்திடாய்கதி
வள்ளலேஞான ப்ரகாசரே வந்தனர்த்தேடி சிந்தனுபாடி
வாழ்த்தினேன் சதாவும் நேசரே (ஆ)

நெஞ்சமும் உருகிவாடுதே நிதமுமுங்கள் பதமலரை
நேரிற்காண ஆவலாகுதே எந்தன்
பஞ்சபாதகம் நீக்கவேநிதம்
கெஞ்சுமென்முகம் நோக்கியேயருள்
பாக்கியாசர்ப்பத்தைக்கொன்றவா துயரைத்தீரும் அருளைத்தாரும்
பக்திமனமீது சென்றவா (ஆ)

பாவவினையேயகற்றியே அநுதினமும் அருள்புரிந்து
பக்கீர்முகமூதையாளுமே திரு
கோவில்சூழுயர் மக்கமாநகர்க்
குறைசியின்குல முற்றவாவுங்கள்
கோகனதப் பாதந்தாருமே கொந்தளமாயுன் கெந்தானைவேண்டிக்
கோரினேனெந்தனைக் காருமே. (ஆ)

செந்தாழம்பூவுந்தேன்கமழும் என்ற மெட்டு.

வரிசைக் குறைசி குலத்திலுதித்த
மதினநன்னகர் வாசரே
அருசில்கபூசோமேடறி—ஆதியிடறபேசும்
ஆஹாகாவேதம் ஆனந்தபோதத்
யாகாவுன்பதம் தந்திடும் நீதம் (வ)

பாந்தல்வல்லியம் பாய்மாஅத்திரி
பகருஞ்சப்த முழக்கமே
ஆய்ந்தமறைப் பொருளாய்—வாய்க்தமுஹம்மதுவே
அடிமையெந்தனின் மிடியையகல
ஜடுதியருள கொடியில்வருவாய் (வ)

ஸிங்காரஞ்சேர் சோலைமதினா
திருவின்கற்பக ராஜனும்
தங்கமிருந்ததுறைத்—தங்கமுஹம்மதுவே
தயவுதந்தென்றன் வறுமைதைந்திட
நயமுவந்திடும் குயின்குடையவரை (வ)

வண்டுகள் மதுவை யுண்டிசைபாடும்
மகிமை வேல்வார்கோட்டையின்
தண்டமிழ்க் கவிபொழியும்—தாஸன் பக்கீர்முஹம்மது
சந்தம்புனைந்திடும் சந்தமலர்ப்பதம்
தந்திடுமற்புத சுந்தரவரத (வ)

வெண்பா.

திங்க டனையழைத்த செய்யதகம் மூதரின்மேற்
பைந்தமிழி னற்பதங்கள் பாடிடவே—விந்தையதாய்
யார்க்கு மமுதளிக்கு மாதிப் பெரியோனே
காக்க நிதம் வருவீர் காண்.

அம்பிகா உன்மகன்குகன் என்ற மெட்டு.

பல்லவி.

நன்னபி அம்பிகாநாதா—எண்ணினேன் சந்ததம்தாதா (ந)

அநுபல்லவி.

முன்னவ னொளியிலுற்று மோனமயில் ரூபமாகிக்
கண்ணகன் ஞாலம் போற்றக்
காசீம் தாசீம் யாசீமாகிய (ந)

பூரணமதி யழைத்தீர் பூமிதனில் தீன்விளைத்தீர்
காரணமா யுதித்தீர்
காரும் பாரும் தாரும்நல்லருள் (ந)

அம்புவியிலேயடியேன் செம்பொற்பத மேதுதித்தேன்
துன்பமலைதயே யகற்றுந்
துரையே வருவாய் விரைவிலேதிரு (ந)

காதவழியே மணக்கும் கந்தமதுவே சிறக்கும்
ஆதமுதலோர் துதிக்கும்
அருள் நிறை குருவேயெழில் (ந)

முத்தொளிவிலான் போதா சுத்தர்முஹம்மூது நாதா
பத்தன் பக்கீர் முஹம்மூதா
பாடித் தேடி நாடினேனருள் (ந)

வெண்பா.

அண்டமெலாஞ் சிந்தனைசெய் ஆதிமுஹம் மூதரின்மேல்
தண்டமிழி னற்பதங்கள் சாற்றவே—எண்டிசையுங்
காத்தழிக்கும் வல்லவனே காரணனே பூரணனே
தோத்தரித்தேன் நீயேதுணை.

பூவிருந்திருவே என்ன வண்ணச்சந்த மெட்டு.

தாமரைப் பதமே தரு வாய் மறைப்பொருளே—திருத்
தானவனெளி யானுதித்திடும்
மோனரஞ்சித அற்புத விற்பன

காரணக் குருவே கதி காட்டிடுந் தருவே—உயர்
கானகந்தனில் மேவிவேடுவன்
மான்பின்னே நின்ற நற்றவ முற்றிடும்

பூமரப் பொழில்சூழ், உயர் மாமதினமேவாழ்—திரு
பூதலத்துணை யேதுதித் தனன்
மாமகத்துவக் கற்பகப் பொற்பாதா

ஆரணப் பொருளே அரு ளானந்தக் கடலே—திரு
ஆதமெய்ந்நுதன் மீதிலங்கிடும்
வேதஞரயகாப்துல்லா செய்தவப்

பாலராயுதித்த மன்ற மூலமாய்—ஜெனித்த
பாதுஷாபுகழ் நாதரே நிதம்
ஓதும்பக்கீர் முஹம்மூது செப்பிடும் (தா)

விதரண கணபதித்தி வருவாய் என்ற மெட்டு.

பல்லவி.

விகசிதபத மலர்துதருவீர் சதாவுமெந்தன்
அகமதுகளி கொள எதிர்வருவீர் (வி)

அநுபல்லவி.

சகலலோகர்க்குஞ் சாதகமாகிய
தாளினைநிதஞ் சாற்றிச் சாற்றி
அஹம்ம தென்றுனைப் போற்றிப் போற்றி
அருளதுபெற வொருவரமது
பெருகவேயிது சொளயுருகினேன்
ஆதி நாதா வேத கீதா (வி)

128159

சரணங்கள்.

தும்பிக்கை சலாமுறைக்க அப்பூஜகிஸ் வெம்பிமனம்பறக்க
நம்பிக்கை கொள்ளாததால் உத்துபாரி புன்பற்றிடரிவிழ
நாகத்தைவதைத் தேகப்பாலேக்குற்புணற்
ருகத்தைநீர்த்தேகக் கொடுவரிபுகழ்சொல
பூகத்தடம் பொழில்சோலே சாமுக்கேகிடும்வேளே
மேகக்குடையுடன்செல்ல யாகத்தவருமைநல்க
யோகத்திருமயில்ரூப தேகத்தினில்முகர்மேவ
நாலாவேத மூலாதாரப் பொருளாய் காக்ஷிபலபல
நசூலாய்வருநபி மார்களுக்குமேலாய் புகழ்பரவ
நானடியேன் உங்கள்பதஞ் செந்தமிழால்பாட
நீர்தயவுசெய்திடுவீ ரென்வினைநோயோட
நாதர்நபியானவரே சங்கையதுநீட
ஞானமறையானநுதலா முன்புகழேபாட
நாட்டாய் பதமலர்
கூட்டாய் துயர்தனை
யோட்டாய் அருள்தனை
யூட்டாய் பிணைதனை
மீட்டாய் யிதுததி
நாடித்துதிசெய் பக்கிர்முகம்
முனுக்கருள்புரி நத்தி
நீடித்திடவுமே முத்தி
பாடித்துதித்தேன் சித்தி
நலம் பெருந்தி வலங்கிர்த முடன்
துலங்கும்முத்தொளி விளங்கும் நல்நபி
நாதரே கருணைசெய் நீதரே (வி)

சோமசேகரனருளும் பாலா வேலா என்ற மெட்டு.

பல்லவி.

தானவன்றனையழைத்த நாதாவேதா யெக்கீன்
மோனமயில்ரூபமான போதாநீதா அருள் (தா)

சரணங்கள்.

கானகத்தில் மான்பிணையாய் நின்றீர் நின்றீர் யிறை
யோனிடத்திலேயருகில் சென்றீர் சென்றீர் மறை
யானதைப்பயிர்விளைக்க வந்தீர் வந்தீர் குறை
யானவன்கரம்பொருந்து தந்தீர் தந்தீர் திருத் (தா)

வாணிபமாய்சாமுக்கேகும் வேளை வேளை பாதை
தான்தவறிப்பாலையினுள் ளேகும் வேளை தாக
மானதினுலேவருவோர் வாடுங் காலை தண்ணீர்
தானமைத்துத் தாகந்தீர்த்தீர் சோலை சோலை திருத் (தா)

ஆமீனர்தவத்திலுற்ருய் அன்று அன்று சொர்க்க
மாநகரிலேஜபருந் தன்ன மென்று உயர்
பூமலர்பொழில்மதின ரென்று என்று உங்கள்
மாமலர்ப்பதந்தந்தாள்வீ ரென்று என்று திருத் (தா)

சந்ததமும்பைந்தமிழைப் பாடிப் பாடி யெந்தன்,
சிந்தைதனிலேதுதித்தேன் நாடி நாடி இந்த
மைந்தன்பக்கிர்முகம்மது தேடி தேடி உங்கள்
சுந்தரப்பதந்தருவீர் நாடி நாடி திருத் (தா)

இந்தவாவியின்சுந்தரம் என்றமெட்டு.

பல்லவி.

இன்னுந்தாமதம் பேதையா பிறசூல்நாதா (இ)

அநுபல்லவி.

முன்னேளுளிவிலுற்ற அண்ணலகமதுவே
மூத்திதருமக்கச் சுத்தரப்புதுல்லா
புத்திரனுய்வந்த முத்துமுகம்மூதா
மூலமறைப்பொருளதாய் விளங்கவந்த
ஞாலந்தனக் குகந்தவா (இ)

சரணங்கள்.

ஆதமுதலிலுற்று நீதம்விளங்கவந்து
அருகிலேயரிய ரகசியமதை
விறசாய்ப்பேசிய குறைசிக்குலமே

அம்பியாவரனநாயகம் அமரர்போற்றுங்
அம்பர்கமழுங் தாயகம் (இ)

காரார்குடைநிழற்றும் பேருய்விளங்கவந்த
காரணசற்குரு வாகியஅற்புத
பூரணமாய்நின்ற தாரணிபோர்போற்றும்
கந்தங்கமழும்நாயகா கருணைசெய்வீர்
காசிம்முகம்மதானவா (இ)

சங்கைவிளக்குந்தவ துங்கமுகம்மதுவே
சததளஇரு பதமலரதனை
மதலைசொல்மொழி யிதமாயின்புற
சாற்றும்பக்கீர்முகம்மதே உங்களைநம்பித்
தோத்தரித்தேன்முகம்மதே (இ)

பாண்டியனின்றமீனுக்ஷி என்றமெட்டு.

மங்காத மாமறைப்பொருளே மதினு
வாழ்முகம்மதே
கொங்காருஞ் சோலைசூழ்மக்கக் குறைசி
குலத்திலவமணியே
சங்கையே மிகுத்த தவமேரே சபீகுல்
மூதுநபீநபியே (மங்)

தொகையறு.

சிங்காரமே சூழ்தருசின்மேல் முத்தொளிவாகிய
செய்யதகம்மதுவே
மங்காத குத்துபுத்தாளுவாய் வந்த
மயில்ரூபசுந்தரமாணிக்கமே

பல்லவித்தொடர்:

கங்குலின் குடையுடையோரே கருணைக்
கடலையுண்டோரே
பங்கயப் பொற்பதந்தருவீரே பயகாம்பர
முகம்மத்ரசூலே (மங்)

தொகைரு.

வீசும்பரிமள தேகவசிகராராகிய விற்பனஞன
வேந்தர்முகம்மதுவே
மாசிலா வல்லோன் விக்காவினைக்கண்ட
மகிமைகுறையாத மாதவநாயகமே

பாட்டுத்தொடர்.

ஆசிலா வுலகமேபுகழும் அமரர்
னுதினம் பரவும்
வாசப்பொற் பாதமேதாரும் வரிசை
முகம்மூதேகாரும் (மக்)

தொகைரு.

அஞ்சாத நெஞ்சகபுஜகிலாண்மையை யடக்கிய
அற்புத கற்பகமே
பஞ்சாட்சரத்தின் பொருளாயுலகெலாம்
பரவியபயகாம்பர நாயகமே

பாட்டுத்தொடர்.

கஞ்சணத் துருவதாயிருந்தீர் ஹாமீம்
முகம்மதாயுவந்தீர்
செஞ்சரணப் பாதமேதருவீர் செய்யது
அகம்மதே வருவீர் (மங்)

தொகைரு.

அஞ்சலிசெய்து பக்கீர்முகம்மதெனும் அடிமை
அனுதினம் உங்களாதரவை
தஞ்சமென்றுங்கள் கஞ்சமலர்ப்பதந்தனை
நம்பினேன் தர்க்காமுகம்மதுவே

பாட்டுத்தொடர்.

வஞ்சியர் மாய்கையைப்போக்கும் வறுமை
நோய்துயர் நீக்கும்
அஞ்சலி புரிந்தேனருள்புரக்கும் அகம்மதே
ஆனந்தந்தாக்கும் (மங்)

இராகம் இந்துஸ்தான் தோடி. தாளம் ஏகம்.

பல்லவி.

கஸ்தூரிஅம்பர்வாடை கமழும்முகம்மதே (க)

அநுபல்லவி.

விஸ்தாரமக்கநகர் அஸ்தானத்தில்புறந்த
ஒஸ்தாதுவாயுலகில் முஸ்தபாவாகிவந்த
விளங்குகருணைமணியே துலங்குநவநிதியே
விண்ணோர்புகழுந்தவ அண்ணலகம்மதே (க)

நேசமாயிறையோனிடம் ஆசித்தநாயகமே
பாசமுதவுந்திருக் காசிம்முகம்மதுவே
பங்கயம்பொற்றுணைநிதம் நம்பினேனிவ்வேழை
நங்குடைசெய்யுந்தவ துங்கமுகம்மதே (க)

ஆசிங்குலக் கொழுந்தே காகினிக்கோர் நற்றவமே
மாசிலாமாமணியே வள்ளவிறசூல் நபியே
வருந்தும் யிந்தயேழை பெருந்துயரைநீக்கும்
மங்காப்புகழ் மிகுத்த சங்கைமுகம்மதே (க)

மேகங்குடைப் பிடிக்கும் தாதாமுகம்மதுவே
பாகமுடனே தமிழ் பக்கீர்முகம்மது நிதம்
பாடியுமைத்தேடித்துய ரோடிடவேநாடிக்
கோடிசரணஞ் செய்தேன் கோகநகப்பாதமே (க)

## லாவணி.

ஆதிஒருவன் றிருத் தூதரெனவுலகில்
ஆக்ஷிமிகுந்த நாயகம் அருமறையின்
காக்ஷிக்குடைய தாயகம் புவியோர்பவம்
மீக்ஷிக்குவந்த நாயகம் கருணைசெய்யும்
அம்பியாவான தாயகம் (ஆ)

ஆதந்திருஒளிவில் மீது அப்துல்லா நுதல்
ஆனிமுத்தாக நின்றவர் அங்கமுழுதும்
வீசுங்கஸ்தூரி கொண்டவர் ஜிபுரிலுடன்
ஆதியருகில் சென்றவர் அமரர்தொழும்
அண்ணலகம்ம தானவர் (ஆ)

நாதா வுங்களினிரு பாதாபிஷேகஞ் செய்தேன்
நாடியெந்தனைப் பாருமே பொல்லாததுய
ரோடக்கருணை தாருமே யிருலோகத்தின்
பாதாரவிந்தந் தாருமே உங்களையல்லால்
யார்தானுதவி கூறுமே (ஆ)
சாகரஞ்சூழ்புவியில் பாகமுடனேகவி
சாற்றும்பக்கீர் முகம்மூதே அநுதினமும்
போற்றினேன் மென்னகமீதே-சிறியேன்றுயர்
தீர்த்தருள்செய் முகம்மூதே நலவருள்செய்
தோத்தரித்தே னகம்மூதே (ஆ)

நாகூராண்டவரே என்ற மெட்டு.

பல்லவி.

ஆண்டவரே யிறகு லாண்டவரே
யிறகு லாண்டவரே
வேண்டிவந்தே னுண்டருளும்
சான்றோர்புகழ் நாயகமே (ஆண்)

அநுபந்தசரணங்கள்.

ஆழிசூழ்மதீனை வாழுமுகம்மூதே
தாளைத்தருவீரெனவே சாற்றினேன்யானே
பதந்தனைப் போற்றினேன் கோனே
தங்கும் நறை பொங்கும் புகழ்
எங்கும் மறை துங்கனுன (ஆண்)
வேலைசூழுலகிற் பாலன்றுயர் தீரும்
காளைமகசர் நாளினிற் நாடிப்பாரும்
சுபர்க்கங் கூடவாரு வாரும்
நாதா முக மூதா யிறை
தூதா அருள் நீதருன (ஆண்)
ஞாலமதனில் மரித்த பாலன்றனைக்கூட்டியுண்ட
ஆலமதனைப் புசித்த அண்ணல்நாதரேமதீனை
மன்னவனு னேரே
ஆசீங் குலத் தாவீம் திருக்
காவீம் மறை நேசருன (ஆண்)

சாலமறை புருகான் கோலமயில்ரூபரே
பாலன் பக்கீர்முகம் மதுபாடினேனையா
நிதமுந் தேடினேன் மெய்யா
பாரும் அருள் தாரும் துயர்
தீரும் குரு நாதருன (ஆண்)

தந்தானமடி என்ற மெட்டு.

கருணைக்கற்பகத் தருவாயுற்றிடுங்
காரண நாதா ததியருள்
பூரணவேதா மருமலர்த்
தானருள்நீதா உங்கள்
கழலைநத்தினேன் சித்தமும்வைத்திடுங்
காருண்யநாதா கந்தமலா
மார்பணி நீதா (க)

பரமகுருசில்கபு சோபேறிய
பபகாம்பர்நாதா குபிரச்
சியம்பெரும்வேநா பதம்நிதம்
சுபம்வரந்தாதா யிந்தப்
பாரிலொப்பனை யாருஞ்செப்பிடக்
கூறுதற்கரிதே காரம்
ஓதுவதுளதே (க)

மருமைப்பதியில் கருணைபுரியும்
மகம்மூதுநாதா மான்மதங்
கமழுமேவேதா தயாள
குணமுளநீதா திரு
மதினநன்னகர் தனிலுறைந்திடு
மறையருள்குருவே யெந்தனின்
வறுமைதீர்த்தருளே (க)

மக்க மதினைதிக் கெங்கும் போற்றிடும்
மகம்மூதுநபியே ஜெகமேல்
புகழ்ந்திடுங்கபியே அமரர்
பணிந்திடும்நபியே இந்தப்

பக்கீர்முகம்மது யிக்கவி செப்பினேன்
பாரும்யெந்தனையே உங்களைக்
கோரிவந்தனமே (க)

வீர ராவணசம்மாறு என்றமெட்டு.

பல்லவி.

திரு கஞ்சமலர்ப் பாதந்தாருங் காசிந் தாஸீம் உங்களைக்
கெஞ்சியே பணிந்தேனருள் தாருந் தாரும் (திருக்கஞ்)

அநுபல்லவி.

மிஞ்சுபுகழே மிகுத்த மஞ்சுகுடையேதரித்த
ரஞ்சித முகம்மதுமே செஞ்சொல்பதமருளும் (திரு)

சரணங்கள்.

கோக நகப்பாதந் தாருங் கோவே பூவே திரு
யேகனினொளிவிலுற்ற பாகே பாகே
சாகரஞ்சூழ்புவியில் மாகமளாவுமக்க
யோகநகரிலுற்ற தாகாமுகம்மதுவே (திரு)

அங்கமுழுதுங் கமழுந் தங்க நாதா மேனி
தங்கியநுபுவ்வத்தது பொங்கும் நீதா
பங்கமில்லாமல் கலவை தங்கிடக்கருணை செய்வாய்
செங்கையறந் தங்குங்கூறை சிங்கமுகம்மதுவே (திருக்)

நாளைமகசர்நாளையில் வாடிடாமல் யிந்தப்
பாலன்றுயர் தீர்த்தருள் றெசூலே மேலே
சீலன் பக்கீர்முகம்மது பாடுங்கவிக்கருள்செய்
ஞாலமிசையுமது பாதமலரிணையின்
ஆதரம் வேண்டுகிறேன் (திருக்)

அடுக்குமல்லிகை என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஆரணப்பொருளான கற்பகமே யீரேழுலகு
மமைக்கு முன்னொளிவான நற்றவமே யிந்தப்
பாரில்மாமதி மீதழைத்துமே
சூதரின்கர மேபொருத்தியே
பரிமள மணங்கமகமவெனவே காதம் வீசிடும்
பாதந்தந்திடும் வேதநாயகமே

காரணக்குரு வானவிற்பனரே பரமனருகில்
கபுசோடேறிய கருணைநாயகமே யொளிர்
காரிநீள்குடை மேவிவந்திடும்
பாரில்யாநபி யாகவந்திடும்
காசிமாகிய தாஹீம் நாயகமே புவியோர்கள் பவத்தை
கடத்திச்சுவர்க்கம் புகுத்துந்தாயகமே

தோரணித்திறள் சூழும்பதறிலே அபுஜகில்முதல்வரின்
சேனையோர்களைக் கருவறுத்தவரே அந்த
தேவர்நித்தியம் பாதம்நத்திடும்
மூதுரைப்பொரு ளானவற்புத
தேக்மீ துறை மேவுலாஞ்சினையும் மாசணுகிடாத
சிறந்திலங்கிய கருணையங்கடலே

பாரினிற்புகழ் மிகுத்தமக்கமெனும் நகரதனிற்பிறந்த
பயகாம்பர் நபியானநாயகமே நின்
பாதசேவையே ஆவலாகவே
வேதநாயக மானநாதரைப்
படிக்கும் பக்கீர்முகம்மதுக்கருளே - அநுதினமும்நாமே
பகருமுகம்மதிறசூல் நாயகமே

சுந்தரப்பியாரி என்ற மெட்டு.

கண்ணிகள்.

நாதாநவ நீதா வேதா நறும்மலப்பதந்தருவீர்
நறுமலர்ப் பதந்தருவீர் நாடுந்தீ தறுத்தருள்வீர் (நா)

காதம்பரி மளம் வீசும் கற்பதேகதேஜசரே
கற்பதேகதேஜசரே நற்கதி யருளுவீரே (நா)

சோதிமதில் சூழும்நீத சொர்க்கமதினுவரசே
சொர்க்கமதினு வரசே தொல்லையகற்றும் விரசே (நா)

பூதலத்திலேஹபீபு புகலுமதியையழைத்தீர்
புகலுமதியை யழைத்தீர் போற்றினோர்க் கருள்விளைத்தீர்

சீதசெந்தா மறைப்பாதம் சிரமிசைபக்கீர்முகம்மத்
சிரமிசைபக்கீர்முகம்மத் தேடிச்சூடினேனருள்சத் (நா)

அம்பாள் மதுரைமீனாக்ஷி என்ற மெட்டு.

சதுர் மாமறைப் பொருள் நாதா உங்கள்
தாளிணையைத் தரவாதா மா
மதியையழைத்த நாதா மதியருளும் வேதா
ஜகம்புகழுங் கற்பகக்காவே நல்ல
தாஸீமாகிய பூவே யிந்த
இகபரமறி கோவே இறைஞ்சினேன் தேவே
அதிவித சுகிர்த நற்பதமே தினம்
அண்டினேனது சதமே எந்தனை
யாதரிப்பது யிதமே ஆகுமதூ ரிதமே
அகம்மதென்னு நல்லமணியே அரு
ளானந்தக் கவிக்கனியே பக்கிருக்
கனுகியறுத்துப் பிணியே அருளுவீர்நன்மணியே

இருகம் தோடி தாளம் ஆதி. ஓாடி.

பல்லவி.

இனியாகிலுங் கருணைசெய்வாய் ஏழையென்மீது

அநுபல்லவி.

தனியோன்றிரு ஒளிவில் மணியாகவந்துதித்த
தாஸீம் முகம்மதென்னும் யாசீன்முகம்மதுவே
தருணமே அருளது புரிகுவீர்குருநபி
சததளவிருபத மலரருள் துறையேனீ (இ)

சரணங்கள்.

துனியா விதனில் யான்பிறந்து பொல்லாதபெருந்
துன்பமதால் மனமிடைந்து கொடிதாகிய
அனியாயமாய்ச் சியலடைந்து நல்வழிதனில்
அடையாமலே சிலநாள் திரிந்து யினிதாகிய
தொழுகைநோன்போத லனைத்தையு மிழந்து
றசூல்சரணைப் பேணுமலே திரிந்து
மணியே முகம்மதே நல்வழியினிற் சிறந்து
மார்க்கமதனில் மன ஊக்கமுடனே செல்ல
வரமருள் புரியிறை யருசினிலடர்திரு
மாகதம யில்வடி வுடையதோர்திருநபி (இ)

அமரர் நிதம்பரவும் பாதம் காதவழிக்கு
கமழுங் கஸ்தூரியம்பர் தேகம் தெரிசனமே
புரிந்தால் வருமேநல் யோகம் நிகபரமும்
புரிவார் கருணையுள்ள பாகம் நிரேழுலகும்

சசலம் யெண்டிசைதிக்கும் சகலபல்லுயிர்கட்கும்
தபனன் சந்திரன் உடு சங்கைவருசனுக்கும்
புவனந்தனில் மதிக்கும் நவரத்தினங்களுக்கும்
புகழுமுகம்மதொளி வதனிற் பிரித்தவல்லோரன்

புதுநற வருந்திய அளியினஞ்சுதிதரும்
பதிமதினமேயர செனவருதிருநபி (இ)

வல்லியந்தன்னைப் பேசச்செய்தாய் மருவலரைச்
செல்லும்பதரில் மணல்பெய்தாய் அபூஜஹீலை
வெல்லும்படிக்கி உறைசெய்தாய் உடுதில்உபை
தள்ளிஉயிர் பிரியச்செய்தாய் உலகில்பெரும்

வள்ளலென விளங்குமாமறை நடந்தோரே
மதுரம் பொருந்தும் நல்லமக்கத் துதித்தவரே
நல்லபதத் தடையாளம் நபியாகவந்தவரே
கானிலந்தனிலே பாழுங் கிணற்றில் நீரழைத்தோரே

நறுமலரிருபத மதுதனையனுதினம்
நாடியே சிரமிசை சூடியே பாடினேன் (இ)

முச்சுடரின் ஒளிவில் நின்றாய் யெக்கின்மரத்தில்
பச்சைமயில் ரூபமேகொண்டாய் ஜபரூத்தன்னம்
பக்ஷிரூப லாவண்யம்வுண்டாய் அருசின்மேலே
விச்சித்ர முத்துருவாய் நின்றாய் அரியஜோதி

பக்ஷமுடையகனி பயகாம்பரூணமணி
பரமன் திரு வொளிவிலுருவானகுருமணி
அச்சமகற்றுமெந்த னருவிழியிருமணி
அடிமைபக்கீர்முகம்ம தகமகிழ்வுருமணி

அஞ்சரியனுதினம் செஞ்சரணப்பதம்
மஞ்சிதுடையிடும் ரஞ்சிதமுகம்மதே (இ)

வடிவேலனோடெதிர்வாவா என்ற மெட்டு.

பல்லவி.

ஹபீபிற் றசூலே பொற்பதந் தா தா

அநுபல்லவி.

நபியெனவுற்றாய் நான்மறைகற்றாய்
நயகுணமுற் றாயருள்மிகப் பெற்றாய்
கவின்குடை பெற்றாய் கனதுதியுற்றாய்
காசிம் முகம்மூதே யெனும் பெயர் பெற்றாய்
குற்றதுல் அய்னி துற்றதுல் பைலா
சித்றத்துல் முன்தாகா நிழலது தா தா
சுபதுதி பாடச் சுகமது கூடச்
சுந்தர முகம்மூதே நல்லருள் நாட
பவமது ஓடப் பயகாம்பர் நாட
பக்கீர் முகம்மதுக் கேயருள் கூட

விருத்தம்.

அருள்மேவு திருவொளியி லவதாரஞ் செய்வித்த
அன்பியாவான நபியே
அங்கமுழு துங்கமழ் சங்கையுள வேதரே
ஆனந்தமான நபியே
திருமேவு அருசின்மேல் முத்தொளிவாகிய
செய்யதகம்மூது நபியே
செஞ்சரணப் பக்திரஸ சிங்காரக் கீர்த்தனை
செப்பஅருள் புரியும்நபியே
வரமேவு முன்னருள் தந்தெந்த நாளிலும்
வாக்கிலிருந்தாளும் நபியே
வையக மீதினில் துய்யகவி மாப்பொருள்
வளர்ந்தேற வந்தநபியே
திறள்மேவு முன்னடிமை பக்கீர் முகம்முதுட
தீவினையகற்று நபியே
செம்பொனுல கோர்போற்றுந் தன்பிறான் றாதரே
செய்யதகம்மூது நபியே.

பக்திரஸப் பதாநந்தக் கீர்த்தனை மூதற்பாகம் முற்றிற்று.